# பல்கலைக்கழக அனுமதியில் ஆண் மாணவர்களின் உள்நுழைவு வீதம் குறைவதற்கான காரணங்கள் - கண்டி மாவட்டத்தில் தெனுவர கல்வி வலயத்திற்குட்பட்ட தெஹிஅங்க அல் - அஸ்ஹர் மத்திய கல்லூரியினை மையப்படுத்திய ஆய்வு

எம். என் சமீர் அஹமட்[1], எம். எம் முஸ்தாக் அஹமட்[2]

South Eastern University of Sri Lanka
info.shameerahmed@gmail.com , faisanrock@gmail.com
hss38

**ஆய்வுச் சுருக்கம்**: கண்டி மாவட்டத்தில் தெனுவர கல்வி வலயத்திற்குட்பட்ட தெஹிஅங்க அல் அஸ்ஹர் மத்திய கல்லூரியில் பல்கலைக்கழக உள்நுழைவில் ஆண் மாணவர்கள் பெரும் பின்னடைவினை எதிர்நோக்குகின்றனர். கடந்த ஐந்து வருட காலமாக பல்கலைக்கழக அனுமதியில் ஆண் மாணவர்களின் தெரிவு வீதமானது மிகப்பின்னடைவினை எதிர்நோக்கியுள்ளது. அதற்கான காரணங்களை இனங்கண்டு அவற்றுக்கான தீர்வுகளை முன்வைப்பதே இவ் ஆய்வின் நோக்கமாகும். இவ் ஆய்வினை மேற்கொள்வதற்காக முதலாம் நிலை மற்றும் இரண்டாம் நிலைத் தரவுகள் பயன்படுத்தப்பட்டன. நேர்காணல், குழுக்கலந்துரையாடல் என்பன முதலாம் நிலைத் தரவுகளாகவும் பாடசாலை புள்ளிவிபர அறிக்கை, இணையதளம், சஞ்சிகைகள், அதனுடன் தொடர்புடைய ஆய்வுகளும் இரண்டாம் நிலைத் தரவுகளாகவும் பயன்படுத்தப்பட்டு அளவுசார் மற்றும் பண்புசார் ஆய்வு முறையில் அளவை நிலை ஆய்வு முறைமையில் மேற்கொள்ளப்பட்ட ஆய்விலிருந்து ஆய்வு பிரதேசத்தில் கல்வி கற்ற ஆண் மாணவர்கள் பல்கலைக்கழக உள்நுழைவு பெறாமைக்கான காரணங்களாக ஆண் மாணவர்களுக்கு பல்கலைக்கழகம் மற்றும் அதில் உள்ள கற்கைநெறி தொடர்பான அறிவின்மை, உயர்தரம் படித்தால் போதும் என்ற உணர்வு, ஆசிரியர்களை பயிற்றுவிப்பதற்கும், இற்றைப்படுத்துவதற்கும் உரிய பயிற்சிகள் மிகவும் குறைவாகவே வழங்கப்படுகின்றமை, தனிப்பட்ட உளவியல் ரீதியான பிரச்சினைகள் போன்ற பல்வேறு காரணங்கள் கண்டறியப்பட்டன. இவற்றுக்கான தீர்வுகளாக அரசு வறிய மாணவர்களை இனங்கண்டு அவர்களுக்கு நிதி உதவி வழங்குதல், பல்கலைக்கழக கல்வி தொடர்பாக மாணவர் மத்தியில் ஊக்கத்தினையும், சிறந்த அபிப்ராயத்தினையும் ஏற்படுத்தல், சமூகப் பற்று அதிகரிக்க பெற்றோரும், பாடசாலையும் மாணவர்களை கண்காணிப்புடன் சமூக பணிகளில் ஈடுபடுத்த வேண்டும் போன்ற பல்வேறு பரிந்துரைகளின் மூலம் ஆய்வுப் பிரதேசப் பிரச்சினைகளுக்கு ஓரளவேனும் தீர்வினை பெற முடியும் என்பதோடு இவ் ஆய்வானது எதிர்காலத்தில் விரிவுபடுத்தப்படும் போது வேறுபட்ட பெறுபேறுகள் கிடைக்க வழிவகைகள் உண்டு.

**திறவுச் சொற்கள்**: பல்கலைக்கழகம், ஆண் மாணவர்கள், உள்நுழைவு, உயர்கல்வி, பாடசாலை

## 1. அறிமுகம்

கல்வி என்பது மனித வாழ்க்கையில் இன்றிமையாத ஒன்றாகும். எந்த ஒரு சமூகத்தினதும் அபிவிருத்தி அவர்கள் கல்வியில் பங்குபற்றும் நிலைமையில் தங்கியுள்ளது. குறிப்பாக உயர் கல்வியில் காணப்படும் பங்குபற்றல் நிலைமைகள் அச்சமூகத்தின் அபிவிருத்திக்கு பங்களிப்பு செய்கின்றன. இலங்கையின் கல்வி முறையின் படி பாடசாலையில் கல்வியாக கருதப்படும் க.பொ.த உயர்தரப் பிரிவில் தரம் 12 மற்றும் தரம் 13 ஐக் கற்று உயர்தரப் பரீட்சையில் சித்தியடையும் மாணவர்கள் பல்கலைக்கழகத்துக்கு இணைத்துக் கொள்ளப்படுவர். போட்டியாக உள்ள க.பொ.த உயர்தர பரீட்சையில் சிறந்த பெறுபேறுகளை பெற்ற குறிப்பிட்ட சில மாணவர்கள் மட்டுமே உயர்கல்விக்காக பல்கலைக்கழகத்துக்கு அனுமதிக்கப்படுகின்றனர். இலங்கையில் ஆண் மாணவர்களின் கல்வி நிலை மாணவிகளின் கல்வி நிலைகளோடு ஒப்பிட்டு நோக்கும்போது படிப்படியாக வீழ்ச்சி அடைந்து வருவது தெளிவாவதுடன் இது கவலைக்குரிய விடயமாகவும் மாறியுள்ளன. அண்மைக் காலங்களில் பல்கலைக்கழக அனுமதிக்கு தகுதி பெறும் மாணவர்களில் ஆண் மாணவர்களின் எண்ணிக்கை பெண் மாணவர்களின் அளவினை விட குறைவாக உள்ளது. இலங்கையின் பல்கலைக்கழக அனுமதியில் பால் ரீதியான தெளிவான ஏற்றத் தாழ்வினை அவதானிக்க முடிகின்றது. அந்தவகையில் குறிப்பாக மத்திய மாகாணத்தில் கண்டி மாவட்டத்தில் தெனுவர கல்வி வலயத்திற்குட்பட்டு அமைந்துள்ள பிரபல பாடசாலைகளில் ஒன்றான தெஹிஅங்க அல் - அஸ்ஹர் மத்திய கல்லூரியில் கடந்த ஐந்து வருட காலமாக ஆண் மாணவர்கள் மிகக் குறைந்தளவிலே பல்கலைக்கழக உள்நுழைவு அடைகின்றனர். தற்போது உள்நுழைவு வீதம் பூச்சியத்தினை அடைந்துள்ளது. இப் பாடசாலையில் கலை, வர்த்தகம் ஆகிய பிரிவுகள் காணப்படுகின்றன. இப் பிரிவுகளில் கல்வி பயில வரும் மாணவர்களுள் நூற்றுக்கு 99% ஆன பெண்களே பல்கலைக்கழக உள்நுழைவினை பெறுகின்றனர். மிகுதி 1% ஆண் மாணவர்கள் என்பது வருத்தக் கூடிய விடயமாகும். அந்த வகையில் இவ் ஆய்வானது தெஹிஅங்க அல் - அஸ்ஹர் மத்திய கல்லூரியின் ஆண் மாணவர்களின் பல்கலைக்கழக உள்நுழைவு வீதம் குறைவதற்கான காரணங்களையும் அவற்றுக்கான தீர்வுகளையும் ஆராய்வதாகவே இவ் ஆய்வுக் கட்டுரை அமைகின்றது.

## 3. ஆய்வுப் பிரதேசம்

இலங்கையில் மத்திய மாகாணத்தில் கண்டி மாவட்டத்தில் அமைந்துள்ள தெனுவர கல்வி வலயத்திற்குட்பட்டு அமையப்பெற்றுள்ள தெஹிஅங்க அல் - அஸ்ஹர் மத்திய கல்லூரியே ஆய்வுப்பிரதேசமாகும். அங்கு கிட்டத்தட்ட 1000 மாணவர்கள் கல்வி பயிலுகின்றனர். அங்கு உயர்தரத்தில் கலை மற்றும் வர்த்தகப் பிரிவுகள் காணப்படுகின்றன.


ISBN 978-624-5736-14-0




## 4. ஆய்வின் நோக்கம்

### 4.1 பிரதான நோக்கம்

ஆய்வுப் பிரதேசத்தின் பல்கலைக்கழக அனுமதியில் ஆண் மாணவர்களின் உள்நுழைவு வீதத்தினை கண்டறிதல்.

### 4.2 துணை நோக்கம்

ஆய்வுப் பிரதேசத்தின் பல்கலைக்கழக அனுமதியில் ஆண் மாணவர்களின் உள்நுழைவு வீதம் குறைவதற்கான காரணங்களை கண்டறிதல்.

- மாணவர்கள் சார்ந்த காரணிகள்
- பாடசாலை சார்ந்த காரணிகள்
- குடும்பம் சார்ந்த காரணிகள்
- ஏனைய காரணிகள்

## 5. இலக்கிய மீலாய்வு

இவ் ஆய்வுக்கென பல இலக்கிய மீளாய்வுகள் மேற்கொள்ளப்பட்டன. அந்த வகையில் Fareedha, M.R.F., Nawastheen, F.M (2020)[1] என்பவர்கள் மாத்தளை கல்வி வலய முஸ்லிம் ஆண் மாணவர்கள் உயர்கல்வியில் பங்குபற்றுதல் என்ற தலைப்பிலான ஆய்வில் மாத்தளை கல்வி வலய முஸ்லிம் ஆண் மாணவர்களின் உயர்கல்வியிலான பங்குபற்றல் எவ்வாறுள்ளது என்பதைக் கண்டறிதல் மற்றும் அந் நோக்கத்தை அடையும் பொருட்டு மாத்தளை கல்விவலய முஸ்லிம் ஆண் மாணவர்களின் உயர்கல்வியிலான பங்குபற்றல் எவ்வாறுள்ளது, உயர்கல்வியில் பங்குபற்றல் தொடர்பாக மாத்தளை கல்விவலய முஸ்லிம் ஆண் மாணவர்களிடம் காணப்படும் புலக்காட்சி என்ற இரு குறிக்கோள்களை அடிப்படையாகக் கொண்டு முதலாம் நிலை மற்றும் இரண்டாம் நிலைத் தரவுகளின் அடிப்படையில் பகுப்பாய்வு செய்யப்பட்டு ஆழமாக நோக்கப்பட்டுள்ளது.

பாதிமா சஹ்ரா ஜுனைதீன், பாதிமா முபீதா முபாரக் (2016)[2] என்பவர்கள் பல்கலைக்கழக அனுமதி பெறுவதில் ஆண் மாணவர்களின் அனுமதி வீதம் குறைவதற்கான

காரணங்கள் - சிலா / நஸ்ரியா மத்திய கல்லூரியினை மையப்படுத்திய ஆய்வில் அக் கல்லூரியில் பல்கலைக்கழக அனுமதியில் ஆண் மாணவர்கள் பெரும் பின்னடைவினை எதிர்நோக்கியுள்ளமைக்கான காரணங்களையும் அவற்றுக்கான தீர்வுகளையும் முதலாம் நிலை மற்றும் இரண்டாம் நிலைத் தரவுகளின் அடிப்படையில் முன்வைத்துள்ளார்கள்.

I.M. Kamala Liyanage (2014)[4] என்பவர் Education system of Sri Lanka: strength and weaknesses என்ற தலைப்பிலான ஆய்வில் பல்கலைகழக அனுமதியில் ஆண்களின் நிலை தொடர்பாகவும் விவரண ரீதியிலான ஆய்வினை மேற்கொண்டு அது தொடர்பிலான முடிவுகளையும் புள்ளிவிபர ரீதியில் அட்டவணைப்படுத்தியுள்ளார்.

இவ்வாறாக மேற்கூறப்பட்ட இலக்கிய மீளாய்வுகள் மூலமாக தரவு சேகரிப்பு நுட்ப முறைகள், மாணவர் பிரச்சினைகள், அவர்களின் மனநிலைகள் அவற்றுக்கான தீர்வுகள் என்பவற்றினைப் பெறும் வாய்ப்பு ஏற்பட்டது.

## 6. ஆய்வுப் பிரச்சினை

சமீப காலமாக இலங்கையின் பல்கலைகழகங்களில் அனுமதி பெறுவோரில் பாலடிப்படையில் பாரிய வேறுபாடு காணப்படுகிறது. அரைவாசிக்கும் அதிகமான பெணகள் பல்கலைகழக அனுமதி வீதத்தில் செல்வாக்குச் செலுத்துகின்றனர். கண்டி மாவட்டத்தில் தெனுவர கல்வி வலயத்திற்குட்பட்டு அமைந்துள்ள பாடசாலைகளுள் தெஹிஅங்க அல் - அஸ்ஹர் மத்திய கல்லூரியில் பாலடிப்படையில் பல்கலைக்கழக உள்நுழைவில் பெரும் வித்தியாசம் காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. ஆண் மாணவர்கள் உயர்தர பெறுபேறுகளில் பிரகாசிக்காமைக்கான காரணங்களை கண்டறிவதும், அப் பிரச்சினைகளை நிவர்த்திப்பதற்கான வழிவகைகளை கண்டறிவதுமே ஆய்வுப் பிரச்சினையாகும்.

## 7. ஆய்வு முறையியல்

ஆய்வொன்றினை முறையாகவும் திறன்பட செய்வதற்கு ஆய்வு முறையியல் இன்றியமையாத ஒன்றாகும். ஒரு ஆய்வின் உயிர்நாடியாக ஆய்வு முறையியல் காணப்படுகின்றது. இதன் அடிப்படையில் ஆய்வுப் பிரதேசமானது எதிர்நோக்கும் சவால்களை இனங்காண்பதற்காக ஆய்வுமுறையியலானது பயன்படுத்தப்பட்டுள்ளது. இவ் ஆய்வில் அளவுசார் மற்றும் பண்புசார் தரவுகள் சேகரிக்கபட்டதோடு முதலாம் நிலை மற்றும் இரண்டாம் நிலைத் தரவுகள் இவ்வாய்வுக்கு பெரும் பங்காற்றியுள்ளது. முதலாம் நிலைத் தரவுகளாக பாடசாலை அதிபர், ஆசிரியர்கள், பெற்றோர்கள் மற்றும் ஆண் மாணவர்கள் போன்றோரிடம் வினாக்கொத்து, நேரடி அவதானம், கலந்துரையாடல், நேர்காணல் போன்றவற்றினூடாகவும் இரண்டாம் நிலைத் தரவுகளாக முன்னைய ஆய்வுகள், பாடசாலை திரட்டு நூல்கள், கல்வி பணிமனையின் அறிக்கைகள், சஞ்சிகைகள் மற்றும் இணையம் இவைகளின் ஊடாக முதலாம் நிலை மற்றும் இரண்டாம் நிலைத் தரவுகளின் அடிப்படையில் எனது ஆய்வானது வடிவமைக்கப்பட்டுள்ளது.

## 8. பெறுபேறுகளும் பரிந்துரைகளும்

**8.1 பெறுபேறுகள்**

**தெஹிஅங்க அல் - அஸ்ஹர் மத்திய கல்லூரியின் பல்கலைக்கழக அனுமதியில் ஆண் மாணவர்களின் உள்நுழைவு வீதத்தினை கண்டறிதல்.**

ஆய்வுப் பிரதேசத்தில் கல்வி பயில்வோரில் பால் அடிப்படையில் க.பொ.த சாதாரண தரப்பரீட்சையில் சித்தியடைந்து உயர்தரம் படிக்க வரும் மாணவர்களுள் பெரும்பாலானோர் பெண்களே ஆவர். பொதுவாக 3:1 எனும் அடிப்படையிலேயே உயர் தரத்தில் ஆண் மாணவர்கள் கல்வி கற்கின்றனர். இவ்வாறு உயர் தரம் சித்தியடையும் அனைவரும் பல்கலைகழக அனுமதி பெறுவதில்லை. இம் மாணவர்களுக்கு கல்வி நடவடிக்கைகளை தொடர்வதற்கான சகல வசதிகளும் பாடசாலை வளாகத்தினால் செய்து கொடுக்கப்பட்டிருந்தமை ஆய்விலிருந்து தெரியவந்தது. கடந்த ஐந்து வருடங்களாக ஆண் மாணவர்களின் பல்கலைக்கழக உள்நுழைவு வீதமானது மிக மோசமான நிலையில் உள்ளமையை பாடசாலை புள்ளிவிபர அறிக்கையிலிருந்து தெரிய வந்தது.

**அட்டவணை - 01**

தெஹிஅங்க அல் - அஸ்ஹர் மத்திய கல்லூரியின் மாணவர்களின் பல்கலைகழக உள்நுழைவுத் தொகை


| ஆண்டு | உள்நுழைவுத் தொகை |
|---|---|
| 2016 | 01 |
| 2017 | 08 |
| 2018 | 03 |
| 2019 | 08 |
| 2020 | 15 |

**அட்டவணை - 02**

தெஹிஅங்க அல் - அஸ்ஹர் மத்திய கல்லூரியின் மாணவர்களின் பல்கலைகழக உள்நுழைவுத் தொகை பால் அடிப்படையில்

| ஆண்டு | ஆண் | பெண் |
|---|---|---|
| 2016 | 00 | 01 |
| 2017 | 01 | 07 |
| 2018 | 00 | 03 |
| 2019 | 00 | 08 |
| 2020 | 00 | 15 |


ISBN 978-624-5736-14-0




**தெஹிஅங்க அல் - அஸ்ஹர் மத்திய கல்லூரியின் பல்கலைக்கழக அனுமதியில் ஆண் மாணவர்களின் உள்நுழைவு வீதம் குறைவதற்கான காரணங்களை கண்டறிதல்.**

ஆய்வுப் பிரதேசமாக விளங்கும் தெஹிஅங்க அல் - அஸ்ஹர் மத்திய கல்லூரில் கடந்த ஐந்து வருட காலமாக பல்கலைக்கழக அனுமதியில் ஆண் மாணவர்களின் பின்னடைவு குறித்து ஆய்வு செய்யப்பட்ட போது இப் பிரச்சினைக்கான காரணங்களாக சில அதிர்ச்சியான காரணிகளும், சில சுவாரஷ்யமான காரணிகளும் கண்டறியப்பட்டன.

- **மாணவர்கள் சார்ந்த காரணிகள்**
  1. நண்பர்களின் தொடர்புகள் மாணவர்களின் கற்றலைப் பாதிப்படையச் செய்கின்றன.
  2. உயர்கல்வி நிகழ்ச்சிகள் பற்றிய போதிய விளக்கம் அற்றவர்களாக உள்ளனர்.
  3. உயர்தரம் படித்தால் போதும் என்ற உணர்வு.
  4. மாணவர்கள் நேரத்தை திட்டமிடாதவர்களாகவும், பொழுதுபோக்கிற்கு அதிக நேரத்தை செலவிடுவோராகவும் உள்ளனர்.
  5. அரச தொழில் வாய்ப்பினை பெற்றால் அதிகமாக சம்பாதிக்க முடியாது என்கின்ற உணர்வு.
  6. வெளிநாட்டு தொழில் வாய்ப்பினை பெற உயர்தரம் மட்டும் படித்தால் போதும் என்கின்ற மன உணர்வு.
  7. காதல்

- **பாடசாலை சார்ந்த காரணிகள்**
  1. ஆசிரியர்களை பயிற்றுவிப்பதற்கும், இற்றைப்படுத்துவதற்கும் உரிய பயிற்சிகள் மிகவும் குறைவாகவே வழங்கப்படுகின்றது.
  2. கற்றலில் மாணவர்களை ஊக்குவிக்கும் நிகழ்ச்சிகள் பாடசாலையில் குறைவாகவே நடத்தப்படுகின்றன.

3. பாடசாலையில் கற்றலை நேசிக்கக் கூடிய கலாச்சாரம் காணப்படுவதில்லை.

- **குடும்பம் சார்ந்த காரணிகள்**
  1. பெற்றோரின் கல்வி நிலை மாணவர்களின் உயர்கல்வி தொடர்கையில் தாக்கம் செலுத்துகின்றது.
  2. உயர்கல்வி நிகழ்ச்சிகள் மற்றும் வாய்ப்புக்கள் பற்றி பெற்றோர்கள் கொண்டுள்ள அறிவு குறைவாக காணப்படுவதும் மாணவர்களின் கல்வியில் பாதிப்புக்களை ஏற்படுத்துகின்றது.
  3. குடும்பத்தின் வறுமை
  4. ஆண் பிள்ளைகள் குடும்ப தொழிலை தொடர வேண்டும் என்ற மனப்பாங்கு குடும்பத்தில் நிலவுகின்றது.
  5. கல்விக்கு முக்கியத்துவம் வழங்கப்படாத வீட்டுச் சூழல் காணப்படுகின்றது.

- **ஏனைய காரணிகள்**
  1. மாணவர்களிடத்தில் சமூகப் பற்று குறைவாக காணப்படுகிறது.
  2. மாணவர்களின் உயர்கல்வி எழுச்சிக்கு சமூக ரீதியான பங்களிப்புகள் வழிகாட்டல்கள் குறைவாக உள்ளது.
  3. உயர்கல்வி தொடர்வதால் ஏற்படக்கூடிய சமூக நன்மைகள் பற்றிய அவசியத்தை மாணவர்கள் உணராது உள்ளனர்.
  4. ஊரில் உள்ள ஆண் பட்டதாரிகளின் எண்ணிக்கை குறைவு.

போன்றவையே ஆண் மாணவர்கள் பல்கலைக்கழக அனுமதி பெறாமைக்கான காரணங்களாக கண்டறியப்பட்டன.

**8.2 பரிந்துரைகள்**

ஆய்வுப் பிரச்சினையாக இனங்காணப்பட்ட பல விடயங்களையும் கருத்திற்கொண்டு அதிபர், ஆசிரியர்களுடன் இணைந்து மேற்கொள்ளப்பட்ட குழுக்கலந்துரையாடல் மூலமாகவும், ஊர் தலைவர்கள், ஓய்வு பெற்ற கல்வியியளாளர்களினைப் பேட்டி கண்டதிலும், இளம் பட்டதாரிகளிடம் கலந்தாலோசித்ததன் மூலம் இவற்றிற்கான பல தீர்வுகளும், ஆலோசனைகளும் பரிந்துரைக்கப்பட்டன. அந்த வகையில்

மாணவர் சார்ந்த காரணிகள் தொடர்பாக நோக்கும் போது, உயர்கல்வி நிகழ்ச்சிகள் பற்றிய போதிய தெளிவினை உயர்தரப் பாடத்தெரிவு மற்றும் கற்றலை ஆரம்பித்தலின் போதும் அவசியப்படும் ஏனைய சந்தர்ப்பங்களிலும் துறை சார்ந்தவர்களால் வழங்குவதற்கு பாடசாலை ஏற்பாடு செய்ய வேண்டும். நேரத்தை கற்றலுக்கு முன்னுரிமை வழங்கி திட்டமிடுவதற்கும் நண்பர்களோடு உள்ள தொடர்புகளில் வரையறைகளைப் பேணி நடந்து கொள்வதற்கும் பெற்றோர் பக்கபலமாக இருக்கும் வகையில் அவர்களை வலுவூட்ட வேண்டும். பருவ வயதில் ஏற்படும் காதல் உணர்வுளால் கல்வியில் ஏற்படும் அசமந்தப்


ISBN 978-624-5736-14-0

போக்கினை மாற்ற அவர்களுக்கு வாரம் தோறும் அல்லது மாதாந்தோறும் கருத்துரைகளை (Councelling Programmes) வழங்கும் நடவடிக்கைகளை மேற்கொள்ளல். அரச வேலைவாய்ப்புக்களில் சம்பளம் போதாமை எனும் மன உணர்வினை மாற்றி தகைமைகளையும் திறன்களையும் வளர்த்துக் கொள்வதனால் அதிக சம்பளம் அரச வேலைவாய்ப்புக்களிலும் பெறலாம் என்ற அபிப்பராயத்தை ஏற்படுத்தல், வெளிநாட்டு வேலை வாய்ப்பில் ஏற்படுகின்ற சிக்கல்கள் தொடர்பாகவும் விளங்கப்படுத்தல், சமூக ஊடகங்களின் பாதிப்புகள் பற்றி மாணவர்கள் அறிவூட்டப்படுவதுடன் அவற்றை வரையறைகளுடன் கையாள்வதற்கான வழிகாட்டல்கள் வழங்கப்பட வேண்டும்.

பாடசாலை சார்ந்த காரணிகள் தொடர்பாக நோக்கும்போது கற்றல் கற்பித்தலின் பக்கம் மாணவர்களின் கவனத்தை ஈர்க்கவும், மாணவர்கள் இயல்பாகவே கற்றலில் ஈடுபடுத்தவும், உயர்தரத்திற்கு ஆசிரியர்கள் வலுவூட்டப்பட வேண்டும். மாணவர்களைச் சாதனையாளர்களாக மாற்றும் நோக்கில் தன்னம்பிக்கையை மேம்படுத்தும் வகையில் விசேட நிகழ்ச்சிகள் வடிவமைக்கப்பட வேண்டும். உயர்தரத்தில் கற்றலில் ஆர்வமாய் ஈடுபடும் கலாச்சாரம் ஒன்று கட்டியெழுப்பப்பட வேண்டும். இவற்றை பாடசாலை நிர்வாகம் கருத்தில் எடுத்து காரிய மாற்றுதல் அவசியமாக உள்ளது. குறித்த பாடசாலையில் உயர்கல்வி கற்பதற்காக மேலும் பல்வேறு துறைகளை உருவாக்கல் வேண்டும்.

குடும்பம் சார்ந்த காரணிகள் தொடர்பாக நோக்கும்போது, பெற்றோர்களாக வாழும் தலைமுறையினர் கல்வியில் நலிவுற்றிருப்பதன் விளைவு இன்றைய இளைய தலைமுறையின் கற்றல் வாய்ப்புக்களும் தவற விடப்படும் நிலைமை உருவாகியுள்ள நிலையில், உயர் கல்வியின் இன்றியமையாமை பற்றி பெற்றோர்களுக்கு விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்தப்பட வேண்டும். வீட்டுச் சூழலை கற்றலை மேம்படுத்தும் சூழலாக மாற்றவும், தொழிலை விடுத்து உயர்கல்வியை முன்னுரிமைப்படுத்தும் கலாச்சாரத்தை சமூகத்தில் கட்டியெழுப்பவும் சமூக மட்டத்திலும் பாடசாலை மட்டத்திலும் பெற்றோர்களை இலக்குவைத்து வேலைத்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும். குடும்பத்தின் வறுமையில் உள்ள மாணவர்களுக்கு அவர்களின் வறுமை நிலையினை கருத்திற்கொண்டு தனவந்தர்களின் உதவியோட ஆண் மாணவர்களுக்கு கொடுப்பனவுகளை வழங்கி அவர்களைக் கற்பதில் ஆர்வமூட்டப்படுதல் வேண்டும். அத்துடன் பகுதி நேரத் தொழில் வாய்ப்புக்களுடன் கல்வியைத் தொடரும் வசதிகளை ஒழுங்குபடுத்திக் கொடுத்தல். குடும்பத்தில் பரம்பரையாக மேற்கொள்ளும் தொழிலுள்ள சிக்கல்களையும் அத்தொழிலின் நிலையில்லாத்தன்மையை எடுத்துரைத்தல் வேண்டும்.

ஏனைய காரணிகள் தொடர்பாக நோக்கும்போது மாணவர்களின் சமூகப் பற்று அதிகரிக்க பெற்றோரும், பாடசாலையும் மாணவர்களை கண்காணிப்புடன் சமூக பணிகளில் ஈடுபடுத்த வேண்டும். சமூக மட்டத்தில் உயர்தர மாணவர்களின் கல்வி மேம்பாட்டுக்கு சமூக நிறுவனங்கள் பங்களிப்புச் செய்தல் அவசியமாகும், சமூகத்தில் தான் கொண்டுள்ள கல்வித்தகைமையின் அடிப்படையிலே சமூக அந்தஸ்த்தை பெற முடியும் என்பதை ஆண் மாணவர்களுக்கு உணர்த்துதல், ஊரில் உள்ள பெண் பட்டதாரிகளின் மூலம் ஆண்கள்

பட்டதாரிகளாக மாறுவதால் சமூகத்திற்கு ஏற்படுகின்ற சாதகங்களை எடுத்துரைத்தல் வேண்டும். போன்ற தீர்வுகளும் ஆலோசனைகளும் பெறப்பட்டன.

**முடிவுரை**

இவ் ஆய்வின் மூலம் கண்டி மாவட்டத்தில் தெனுவர கல்வி வலயத்திற்குட்பட்ட தெஹிஅங்க அல் அஸ்ஹர் மத்திய கல்லூரியின் பல்கலைக்கழக உள்நுழைவில் ஆண் மாணவர்கள் பெரிதும் பின்னடைவு பெறுகின்றமை இனங்காணப்பட்டது. கல்வியை தொடர்வதற்கான வாய்ப்புக்கள் தமக்கு கிடைக்காது என்ற மனநிலையில் தன்னம்பிக்கை அற்றவர்களாக மாணவர்கள் உள்ளதால் இப் பிரச்சினைகளுக்கு தீர்வாக உயர்கல்வியின் நிலையான பயன்கள் பற்றியும், தன்னால் முடியும் எனும் நம்பிக்கையை மாணவர்களிடத்தில் கட்டியெழுப்புவது தொடர்பான நிகழ்ச்சி திட்டங்களை பல்வேறு மட்டங்களில் நடத்துதல் வேண்டும். அரசாங்கமும், அரச சார்பற்ற நிறுவங்களும், சிவில் சமூகமும் ஒன்றிணைந்து மாணவர்களின் எதிர்காலம் குறித்த நோக்கத்தோடு முனைப்புடன் செயல்பட்டு விழிப்புணர்வூட்டல்களை மேற்கொள்வதனால் இப் பிரச்சினைக்கு தீர்வு காணலாம் எனவும் கண்டறியப்பட்டது. மேலும் ஆண் மாணவர்களும் தமது கல்வியை தொடர்வதில் மிக அக்கறையுடன் செயற்படுவதனாலும் எதிர்காலத்தில் பல்கலைக்கழக அனுமதியில் ஆண் மாணவர்களின் உள்நுழைவு வீதம் அதிகரிக்கலாம் என்பதையே இவ் ஆய்வு கூறுகின்றது.

## References


1. Fareedha, M.R.F., Nawastheen, F.M (2020)., *மாத்தளை கல்வி வலய முஸ்லிம் ஆண் மாணவர்கள் உயர்கல்வியில் பங்குபற்றுதல் - ஓர் ஆய்வு.* MJSSH Online: Volume 4- Issue 2 , Pages 17 – 32 e-ISSN: 2590-3691., https://doi.org/10.33306/mjssh/61

2. பாதிமா சஹ்றா ஜுனைதீன், பாதிமா முபீதா முபாரக் (2016)., *பல்கலைக்கழக அனுமதி பெறுவதில் ஆண் மாணவர்களின் அனுமதி வீதம் குறைவதற்கான காரணங்கள் - சிலா / நஸ்ரியா மத்திய கல்லூரியினை மையப்படுத்திய ஆய்வு.* 6th International Symposium, South Eastern University of Sri Lanka, pp. 893-898., http://ir.lib.seu.ac.lk/handle/123456789/2030

3. Jalaldeen, M. S. M. (2011*). Challenges and Issues of Contemporary Sri Lankan Muslim Education with Special Reference to Ampara District Muslim Education*, 1st International Symposium held on 19 - 21 April, 2011 at South Eastern University of Sri Lanka. http://ir.lib.seu.ac.lk/handle/123456789/1091

4. Liyanage I. M. K. (2014). *Education system of Sri Lanka: strength and weaknesses*, https://www.ide.go.jp/library/Japanese/Publish/Reports/InterimReport/2013/pdf/C02_ch7.pdf Retrieved from

5. Zulfika. P. (2000). Higher Education of Muslim women *(முஸ்லிம் பெண்களின் உயர்கல்வி (* S.H Hasbullah and M.P.M. Saibudeen, (eds), (2000). Muslim Education in Sri Lanka: Women’s Education and Higher Education (இலங்கை முஸ்லிம் கல்வி: பெண் கல்வியும் உயர்கல்வியும் .(Proceedings of the National Conference on Muslim Education in Sri Lanka (Pages 39-60). Muslim Women’s Research and Action Forum. Colombo. ISBN 955-625 010-7